# நமது தினகனி
காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI
Daily Morning

| Vol: 01 | Issue: 302 | 4 Pages | 5.6.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 302 | 4 பக்கங்கள் | 5.6.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## எங்கேயுமே பாஜகவை காணோமே.. அதிமுகவும் மேலே வரல.. சொல்லி அடித்த கூட்டணி கட்சிகள் தேமுதிக, பாமக

சென்னை, ஜூன் 5

அதிமுக, பாஜக பிரதான தலைமைகளைவிட, இவைகளுடன் கூட்டணி வைத்த கட்சிகளே அதிக வாக்குகளை பெற்றிருப்பது வியப்பை தந்து வருகிறது.

இந்த முறை லோக்சபா தேர்தலில், திமுக அமோக வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டாலும், பாஜக, அதிமுக கட்சிகள் எத்தனை இடத்தில் வெல்லப்போகின்றன என்ற ஆர்வம் எகிறியபடியே இருக்கிறது.

எக்ஸிட்போல்: காரணம், வெளியான அத்தனை எக்ஸிட் போல் கருத்து கணிப்புகளிலுமே, அதிமுக பெரும் பின்னடைவையே சந்திக்கும் என்று கணிக்கப்பட்டது.. அதாவது, அதிமுகவுக்கு அதிகபட்சம் 8 இடங்கள், குறைந்த பட்சம் 2 தொகுதிதான் கிடைக்கும், குறிப்பாக, காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி தொகுதிகள் மட்டுமே அதிமுகவுக்கு சாதகமான களமாக சொல்லப்பட்டது.

இதற்கு காரணம், கடந்த சட்டமன்ற தேர்தலை போலவே இந்த முறையும், அதிமுகவின் கூட்டணி மிகவும் பலவீனமாக உள்ளதுதான் என்றுஅரசியல்விமர்சகர்கள்கருத்து கூறினார்கள். எடப்பாடி பழனிசாமி, பெரிய கட்சிகளுடன் கூட்டணி வைக்காமல், தேமுதிக போன்ற கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணி வைத்திருப்பதால், அதிமுக மிகப்பெரிய சறுக்கலை சந்திக்கும் என்றும் கூறினார்கள்.



தூத்துக்குடி: ஆனால், இப்போது நிலைமையே தலைகீழாகி வருகிறது.. அதிமுகவில் கூட்டணி வைத்த தேமுதிகதான் தற்சமயம் டாப்பில் உள்ளது. அதாவது, ஸ்ரீபெரும்புதூர், தென்சென்னை, வடசென்னை, தூத்துக்குடி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி என அத்தனை தொகுதியிலும் பின்னடைவை அதிமுக சந்தித்துள்ளது..

அதேபோல, இந்தமுறைதனித்தே தேர்தலை சந்தித்துள்ளது தமிழக பாஜக.. ஆனால், வடமாவட்டத்தில் பாமகவுக்கு இருக்கும் செல்வாக்கையே பிரதானமாக நம்பி, பாமக என்ற மிகப்பெரிய கட்சியுடன் கூட்டணி வைத்தது.. அத்துடன், 10 இடங்களில் தாமரை கண்டிப்பாக வெல்லும் என்றும் நம்பிக்கை தெரிவித்து வந்தது.

முன்னிலை: ஆனால், பாஜக எங்குமே முன்னிலை வகிக்கவில்லை. பாஜகவின் கூட்டணி கட்சியான பாமகவை சேர்ந்த தருமபுரி மக்களவை தொகுதி வேட்பாளர் சௌமியா அன்புமணி மட்டுமே வெற்றியை தக்க வைப்பார் போல தெரிகிறது.. அதேபோல, அதிமுக கூட்டணி விருதுநகரில் தேமுதிக கூட்டணியில் விஜய பிரபாகரன் பிரதான வாக்குகளை பெற்று வருகிறார்..

தென் சென்னை.. போன வேகத்திலேயே சறுக்கிய பாஜக.. திமுகவின் தமிழச்சி தங்கபாண்டியன் தொடர்ந்து முன்னிலை தென் சென்னை.. போன வேகத்திலேயே சறுக்கிய பாஜக.. திமுகவின் தமிழச்சி தங்கபாண்டியன் தொடர்ந்து முன்னிலை

இவைகளை தவிர்த்து தமிழ்நாட்டின் வேறு எந்த தொகுதியிலும் பாஜகவும், பாஜக கூட்டணியும் முன்னிலை வகிக்கவில்ல என்பது அதிர்ச்சியை தந்து வருகிறது. தென்மாநிலங்களில்கூட வெல்வோம் என்று பாஜக சொல்லி வந்த நிலையில், நட்சத்திர வேட்பாளர்கள்கூட வெற்றி பெறவில்லை என்பது அடுத்த அதிர்ச்சியாக உள்ளது.

நயினார் தொகுதி: அதேபோல் நெல்லையில் நயினார் நாகேந்திரன், கோவையில் அண்ணாமலை, தென் சென்னையில் தமிழிசை சவுந்தர்ராஜன், நீலகிரியில் எல்.முருகன், கன்னியாகுமரியில் பொன்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் இரண்டாம் இடத்தில் உள்ளனர்.

அதாவது, சென்னை தெற்கு, மத்திய சென்னை, வேலூர், நீலகிரி, கோவை, தேனி, ராமநாதபுரம், கன்னியாகுமரி, புதுச்சேரி, திருநெல்வேலி தொகுதிகளில் அதிமுகவை முந்திக்கொண்டு 2வது இடத்தில் பாஜக உள்ளது வியப்பை தந்துள்ளது. இத்தனைக்கும் தனிநபராகவே எடப்பாடி பழனிசாமி போராடினாலும், ஊர்ஊராகசென்று கடுமையான பிரச்சாரம் மேற்கொண்டாலும், அதிமுகவை பாஜக முந்தியிருப்பது, விநோதமான திருப்பத்தை இந்த தேர்தல் முடிவுகளில் வெளிப்படுத்தி வருகிறது.

## அண்ணா அறிவாலயம்சத்தியமூர்த்தி பவனில் தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்



சென்னை, ஜூன் 5

பாராளுமன்றத் தேர்தலில் இன்று ஓட்டு எண்ணிக்கை தொடங்கியதில் இருந்து தமிழ் நாட்டில் தி.மு.க. கூட்டணி தொடர்ந்து முன்னிலையில் இருந்து வந்தது. தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி அதிக ஓட்டு வித்தியாசத்தில் முன்னணியில் இருப்பதை அறிந்ததும் தி.மு.க. பிரமுகர்களும், தொண்டர்களும் உற்சாகம் அடைந்தனர்.

தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் திரண்டிருந்த தி.மு.க. தொண்டர்கள் மகளிர் அணியினர் மகிழ்ச்சி வெள்ளத்தில் துள்ளிக் குதித்து ஆட்டம் ஆடினார்கள்.

அறிவாலயம் முன்பு பட்டாசுகளை வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். டாக்டர் கலைஞர் வாழ்க, வருங்கால பிரதமர் எங்கள் தளபதி வாழ்க என்று கோஷமிட்டனர். காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்திய மூர்த்தி பவனில் அகன்ற திரையில் தேர்தல் முடிவுகள் ஒளிபரப்பப்பட்டது. தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை மற்றும் ஏராளமான நிர்வாகிகளும் தொண்டர்களும் ஆர்வமுடன் பார்த்தனர். இந்தியா கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் முன்னிலை என்று தெரிந்ததும் ஆரவாரம் செய்தனர். பட்டாசுகள் வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினார்கள்.

## பெருங்களத்தூர்செங்கல்பட்டு பறக்கும் சாலைத் திட்டத்தை எந்த மாற்றமும் செய்யாமல் செயல்படுத்த வேண்டும்: ராமதாஸ்

சென்னை, ஜூன் 5

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

சென்னையை தென் மாவட்டங்களுடன் இணைக்கும் ஜி.எஸ்.டி சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட பெருங்களத்தூர் செங்கல்பட்டு இடையே 27 கி.மீ நீளத்திற்கு 6 வழி பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்தை கைவிட இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம்திட்டமிட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

இதற்கு மாற்றாக வேறு திட்டத்தை செயல்படுத்த நெடுஞ்சாலைகள் ஆணையம் திட்டமிட்டிருந்தாலும் கூட, அதனால் எதிர்பார்த்த பயன் கிடைக்காது. ஜி.எஸ்.டி சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் சென்னை முதல் செங்கல்பட்டு வரை பறக்கும் சாலை அமைக்க வேண்டும் என்று பல பத்தாண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது.

பாட்டாளி மக்கள் கட்சியின் தேர்தல் அறிக்கைகள், நிழல் நிதி நிலை அறிக்கைகள் ஆகியவற்றி



லும் கூட இத்திட்டம் குறித்து தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். வளர்ச்சி சார்ந்த இத்திட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் உள்ளது. பறக்கும் சாலைத் திட்டத்தின் தேவையை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமும் ஏற்றுக் கொண்டு, அதை செயல்படுத்த வசதியாக தாம்பரம் முதல் செங்கல்பட்டு வரையிலான சாலையை 8 வழிச் சாலையாக்க திட்டம் வகுக்கப்பட்டு, அதில் தாம்பரம் செட்டிப்புனியம் வரையிலான 23 கி.மீ நீளச் சாலை எட்டு வழியாக விரிவுபடுத்தப்பட்டு விட்டது.

அதன் மீது பெருங்களத்தூர் முதல் செங்கல்பட்டு வரை 6 வழி பறக்கும் சாலை அமைக்கப்பட்டால், அதில் வாகனங்கள் நிற்காமல் செல்ல முடியும் என்பதால், போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறையும் என்பது தான் பறக்கும்சாலைஅமைக்கும்திட்டத்தின் நோக்கம் ஆகும். ஆனால், பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்திற்கு ஒட்டுமொத்தமாக ரூ.3523 கோடி செலவாகும் என்றும், இவ்வளவு செலவில் பறக்கும் சாலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், அதற்காக பறக்கும் சாலையை பயன்படுத்துவோரிடமிருந்து அதிக சுங்கக் கட்டணம் வசூலிக்க வேண்டியிருக்கும் என்பதால் இந்தத் திட்டத்தைக் கைவிட தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் தீர்மானித்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதற்கு மாற்றாககிளாம்பாக்கம் முதல் போத்தேரி வரை 7 கி.மீ தொலைவுக்கு மட்டும் பறக்கும் சாலை அமைக்கவும், மறைமலை நகர், போர்டு மகிழுந்து ஆலை, சிங்கப்பெருமாள் கோயில், மகிந்திரா சிட்டி ஆகிய இடங்களில் மேம்பாலங்களை அமைக்கவும் ஆணையம்திட்டமிட்டிருக்கிறது. இது எதிர்பார்த்த பயனை அளிக்காது. ஜி.எஸ்.டி சாலையில் ஒவ்வொரு நாளும் ஒன்றரை கோடி வாகனங்கள் பயணிக்கின்றன. விடுமுறை நாள்களில் பொதுமக்கள் சொந்த ஊர்களுக்கு பயணிக்கும் போதும், சென்னைக்கு திரும்பும் போதும் இந்த எண்ணிக்கை 50 சதவீதம் வரை அதிகரிக்கிறது. அத்தகைய தருணங்களில் செங்கல்பட்டு முதல் சென்னை வரை கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது வாடிக்கையான ஒன்றாகி விட்டது.

இனிவரும் காலங்களில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று கூறப்படும் நிலையில், எதிர்காலத்திலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் தடுக்க பறக்கும் சாலைத் திட்டத்தை செயல்படுத்துவது தான் ஒரே தீர்வாக இருக்கும். சாலைகள் தான் நாட்டின் வளர்ச்சிக்கான பாதைகள் ஆகும். சாலைகள் போன்ற உட்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துவதில் திட்ட மதிப்பீடு என்பது ஒரு தடையாக இருக்கக் கூடாது.

பெருங்களத்தூர் செங்கல்பட்டு பறக்கும் சாலைத் திட்டத்தை செயல்படுத்துவதால் கிடைக்கும் வளர்ச்சி மற்றும் பொருளாதாரப் பயன்களுடன் ஒப்பிடும் போது, அத்திட்டத்திற்கான செலவு என்பது மிகவும் குறைவுதான். இதைக் கருத்தில் கொண்டு பெருங்களத்தூர் செங்கல்பட்டு பறக்கும் சாலைத் திட்டத்தை எந்த மாற்றமும் செய்யாமல் செயல்படுத்த வேண்டும். அதற்கான செலவை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ராட்சத பலூன்களில் குப்பை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்துகிறோம்.. வடகொரியா





வடகொரியா, ஜூன் 4

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி தென்கொரியாவை அச்சுறுத்தி வருகிறது. அமெரிக்காவுடன் இணைந்து போர் ஒத்திகை மேற்கொள்ளும்போது, இவ்வாறு ஏவுகணைகளை செலுத்து தென்கொரியாவை எச்சரிக்கை விடுப்பது வழக்கம்.

அந்த வகையில், கடந்த சில நாட்களாக ராட்சத பலூன்கள் முழுக்க குப்பைகளை கட்டி அவற்றை தென்கொரியா எல்லைக்குள் அனுப்பி வைத்தது. இருநாட்டு எல்லையில் அமைந்துள்ள தென்கொரிய பகுதிகளுக்குள் ஏராளமான பலூன்கள் இவ்வாறு பறந்து வந்துள்ளதாக தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த பலூன்களில் குப்பைகள், பிளாஸ்டிக் பாட்டில், ஷூ பகுதிகள், சாணம், சிகரெட் துண்டுகள் இடம்பெற்று இருந்தன. வடகொரியாவின் இந்த செயல் மனிதாபிமானமற்றது என்றும் மிகவும் தரம்தாழ்ந்த ஒன்று என தென்கொரியா தெரிவித்தது. மேலும், வடகொரியாவின் இந்த செயலை உடனடியாக நிறுத்தவும் வலியுறுத்தியது.

இந்த நிலையில், வடகொரியா துணை பாதுகாப்பு துறை அமைச்சர் கிம் காங் II, "எல்லைப்பகுதியில் ராட்சத பலூன்களில் குப்பை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்துகிறோம். குப்பைகளை சுத்தம் செய்ய எவ்வளவு கூட்டு முயற்சி தேவைப்படுகிறது, இப்படி குப்பைகளை கொட்டினால் எப்படி இருக்கும் என்பதை தென் கொரியர்கள் அறிந்து கொள்ள வேண்டும்," தெரிவித்தார்.

தென் கொரியா சார்பில் நீண்ட காலமாக பலூன்கள் அனுப்பப்பட்டு வருவதற்காகவே இவ்வாறு பலூன்கள் அனுப்பப்பட்டன என்று கிம் காங் II தெரிவித்தார்.

## இஸ்ரேலியர்கள் மாலத்தீவில் நுழைய தடை: அதிபர் முய்சு அதிரடி




மாலத்தீவு, ஜூன் 4

தீவு நாடான மாலத்தீவில் இஸ்ரேல் குடிமக்கள் நுழைய தடை விதிப்பதாக அந்நாட்டு அதிபர் முகமது முய்சு அறிவித்துள்ளார். பாலஸ்தீன பகுதிகள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் பெண்கள் குழந்தைகள் உட்பட இதுவரை 36,439 மக்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த மே 27 ஞாயிற்றுக்கிழமை பாலஸ்தீனத்தில் அதிக மக்கள் வாழும் ரஃபா நகரில் உள்ள முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 45 பொதுமக்கள் கொள்ளப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு உலகம் முழுவதும் கண்டனங்கள் வலுத்து வருகிறது.

முன்னதாக பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக நார்வே, ஸ்பெயின், அயர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகள் அதை தனி நாடாக அங்கீகரித்தன. ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளும் பாலஸ்தீனத்தில் மீண்டும் அமைதி நிலவ உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

போர் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலுக்கு அனைத்து வகையிலும் ஆதரவு அளித்து வரும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நெருங்கும் சமயத்தில் போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு அழைப்பு விடுத்துள்ளளார். இந்த நிலையில் தான் இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் மாலத்தீவு இஸ்ரேல் குடிமகன்கள் மாலத்தீவுக்குள் நுழைய தடை விதித்துள்ளது.

இதைத்தொடர்ந்து மாலத்தீவில் உள்ள இஸ்ரேலியாளர்கள் உடனே வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதையும் மீறி இங்குள்ள இஸ்ரேலியர்களுக்கு ஏதேனும் அசமபாவித்தம் நிகழ்ந்தால் அவர்களுக்கு அரசு உதவி செய்வதில் சிக்கல் ஏற்படும் என்று என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து இஸ்ரேல் அரசானது மாலத்தீவில் உள்ள இஸ்ரேலியர்கள் உடனே நாடு திரும்பும்படி அறிவுறுத்தியுள்ளது.

சுற்றுலாவுக்கு பெயர் போன மாலத்தீவுக்கு உலகம் முழுவதிலும் இருந்து அதிக சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் சூழலில் இந்த அறிவிப்பானது அதன் பொருளாதாரத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களிலும் இஸ்ரேல் மீது மலாத்தீவு தடைகளை விதித்துள்ளது. இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனை தீவிரமாக நடந்து வந்த 1990 களில் மாலத்தீவில் இஸ்ரேலியர்களுக்கு தடைவிதிக்கபப்ட்டு, பின் 2010 இல் அதனை நீக்கி இஸ்ரேலுடன் அரசாங்க உறவுகளை மீண்டும் மாலத்தீவு புதுப்பித்தது குறிப்பிடத்தக்கது.

# கட்டையால் மனைவியை கொடூரமாக தாக்கிய கணவன்: பதைபதைக்க வைக்கும் வீடியோ



கோவில்பட்டி, ஜூன் 5

மது போதையில் கணவன் சித்திரவதை செய்வதாக போலீசில் புகார் அளித்ததால், ஆத்திரமடைந்த கணவன், மனைவி மீது கொலை வெறி தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான வீடியோ காட்சிகள் வெளியாகி உள்ளன.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே உள்ள தெற்கு திட்டங்குளத்தைச் சேர்ந்த பாலமுருகேஸ்வரி என்பவர் தனது கணவர் சின்ன மருது மீது போலீசில் புகார் அளித்திருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த சின்ன மருது தனது மனைவி மற்றும் மகனை கட்டையால் கொடூரமாக தாக்கியதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் இது தொடர்பாக ஏற்கனவே போலீசில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை எனக் கூறி, பால முருகேஸ்வரி தனது மகனுடன் கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டு புகார் அளித்தார்.

இதையடுத்து அவரது புகாரை ஏற்ற அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி உறுதி அளித்தனர். இந்தநிலையில் தனது மனைவி மற்றும் மகனை சின்ன மருது மது போதையில் கட்டையால் கொடூரமாக தாக்கியதாக கூறப்படும் வீடியோ காட்சிகள் வெளியாகி சமூக வலைதளத்தில் பரவி வருகிறது.

# குடிபோதையில் தினமும் தகராறு: கணவனை கத்தியால் குத்திக்கொன்ற இளம்பெண்





பூந்தமல்லி, ஜூன் 5

பூந்தமல்லி அடுத்த நசரத்பேட்டை யமுனா நகர், 2வது தெருவை சேர்ந்தவர் சீனிவாசன் (வயது 35). தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவரது மனைவி மங்கள லட்சுமி (30). இவர், பூந்தமல்லி போலீஸ் நிலையத்தில் ஊர்க்காவல் படையில் பணிபுரிந்து வந்தார். இவர்களுக்கு தஸ்வந்த் (8) என்ற மகன் உள்ளார்.

சீனிவாசன் தினமும் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து தகராறு செய்து வந்தார். நேற்று முன்தினம் வழக்கம்போல் குடிபோதையில் வீட்டுக்கு வந்த சீனிவாசன், மனைவியிடம் தகராறு செய்தார். இதனால் ஆத்திரமடைந்த மங்கள லட்சுமி, வீட்டில் இருந்த கத்தியால் கணவரின் வயிற்றில் குத்தினார். படுகாயம் அடைந்த அவர் ரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்தார்.

இதுபற்றி தகவல் அறிந்துவந்த நசரத்பேட்டை போலீசார், சீனிவாசனை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி சீனிவாசன் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். இதையடுத்து நசரத்பேட்டை போலீசார், கொலை வழக்குப்பதிவு செய்து கணவனை குத்திக்கொலை செய்த மங்கள லட்சுமியை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# வீட்டில் குளிப்பதை வீடியோ எடுத்து மிரட்டல்... 13 வயது மாணவியை கர்ப்பமாக்கிய குரூர வாலிபர்கள்

மடிப்பாக்கம், ஜூன் 5

சென்னையை அடுத்த கீழ்க்கட்டளை பகுதியை சேர்ந்த 13 வயது மாணவி, அங்குள்ள தனியார் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வருகிறார். மாணவி, தனக்கு வயிற்றில் கட்டி இருப்பதாக பெற்றோரிடம் கூறினார். அதிர்ச்சி அடைந்த பெற்றோர், சிறுமியை எழும்பூரில் உள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்றனர்.

அங்கு டாக்டர்கள் பரிசோதித்தபோது, மாணவி 9 மாத கர்ப்பிணியாக இருப்பது தெரியவந்தது. அதை கேட்டு அவரது பெற்றோர் மேலும் அதிர்ச்சி அடைந்தனர். இது குறித்து மடிப்பாக்கம் மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். விசாரணையில் அந்த மாணவி, வீட்டின் குளியல் அறையில் குளிக்கும்போது, கீழ்க்கட்டளையை சேர்ந்த நிதிஷ் (19), அஜய் (19) ஆகிய 2 பேர் தங்கள் செல்போனில் வீடியோ எடுத்து உள்ளனர்.

பின்னர் மாணவியிடம் அந்த வீடியோவை சமூக வலைதளத்தில் வெளியிட்டு விடுவோம் என மிரட்டி, மாணவியை பாலியல் பலாத்காரம் செய்ததும், இதில் மாணவி கர்ப்பமானதும் தெரியவந்தது. இதையடுத்து மாணவியின் கர்ப்பத்துக்கு காரணமான நிதிஷ், அஜய் இருவரையும் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# 3 வயது மகனை ஏரியில் வீசிய தந்தை அதே ஏரியில் குதித்து தற்கொலை: காரணம் என்ன..?





போரூர், ஜூன் 5

சென்னை தலைமை செயலக காலனியை சேர்ந்தவர் மோகன்ராஜ்(வயது 35). சிவில் என்ஜினீயரான இவர், தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவரது மனைவி பிரியா. இவர்களுக்கு 3 வயதில் தர்சன் என்ற மகன் உள்ளான்.

கணவன் மனைவி இடையே குடும்பத் தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த மோகன்ராஜ், மனைவியை வீட்டின் அறைக்குள் வைத்து கதவை வெளிப்புறமாக பூட்டினார்.

பின்னர் தனது மகன் தர்சனுடன் மோட்டார் சைக்கிளில் தாம்பரம் மதுரவாயல் பைபாஸ் சாலையில் வந்தார். போரூர் ஏரி மேம்பாலத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திய மோகன்ராஜ், திடீரென தனது மகன் தர்சனை, போரூர் ஏரியில் தூக்கி வீசி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்று விட்டார்.

அப்போது ஏரியில் மீன் பிடித்து கொண்டிருந்த சிலர், ஏரியில் வீசப்பட்ட தர்சனை உயிருடன் மீட்டு போரூர் போலீசாரிடம் ஒப்படைத்தனர். இது பற்றி போலீசார் நடத்திய விசாரணையில்தான் மேற்கண்ட தகவல்கள் தெரியவந்தது.

இதுபற்றி அயனாவரம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள், பிரியாவுடன் போரூர் போலீஸ் நிலையம் வந்தனர். பிரியாவிடம் மீட்கப்பட்ட தர்சனை போலீசார் பத்திரமாக ஒப்படைத்தனர். மேலும் இது பற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து பெற்ற மகனை, ஏரியில் வீசி விட்டு தலைமறைவான கல் நெஞ்சம் படைத்த தந்தையை தேடி வந்தனர்.

இந்தநிலையில் போலீசார் தேடிவந்த மோகன்ராஜ், மகனை வீசிய அதே போரூர் ஏரியில் நேற்று காலை பிணமாக மிதந்தார். போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மனைவியுடனான தகராறில், ஆத்திரத்தில் பெற்ற மகனையே ஏரியில் வீசி விட்டோமே என்ற மன உளைச்சலில் நேற்று முன்தினம் இரவே மோகன்ராஜ், ஏரியில் குதித்து தற்கொலை செய்திருக்கலாம் என்று போலீசார் கருதுகின்றனர். அவரிடம் அப்போது செல்போன் இல்லை என தெரிகிறது. இதனால் ஏரியில் வீசிய தனது மகன் உயிருடன் மீட்கப்பட்டது தெரியாமல், ஏரியில் மூழ்கி இறந்திருக்கலாம் என கருதி மகனை வீசி சென்ற அதே வேகத்தில் மீண்டும் அங்கு வந்து ஏரியில் குதித்து தற்கொலை செய்து இருக்கலாம் எனவும் போலீசார் தெரிவித்தனர்.

போரூர் ஏரி மேம்பாலத்தில் நின்றிருந்த அவரது மோட்டார்சைக்கிளை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் இதுபற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# பிளஸ் 1, பிளஸ் 2 துணைத் தேர்வு அட்டவணை வெளியீடு

சென்னை, ஜூன்5

தமிழகத்தில் 2023 2024ம் ஆண்டுக்கான பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகள் மே 6ம் தேதியும், பிளஸ் 1 தேர்வு முடிவுகள் மே 14ந் தேதியும் வெளி யாகின. இந்தத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க, மே 16 முதல் ஜூன் 1 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

தற்போது துணைத் தேர்வுக்கான கால அட்டவணையை அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ளது. அதன்படி, பிளஸ் 2 துணைத் தேர்வுகள் ஜூன் 24ந் தேதி தொடங்கி ஜூலை 1ந் தேதி வரை நடைபெறுகிறது. அதே போல், பிளஸ் 2 துணைத் தேர்வுகள் ஜூலை 2ந் தேதி முதல் 9ந் தேதி வரை நடைபெறவுள்ளது.

ஜூன் 24 மொழிப்பாடம், ஜூன் 25ஆங்கிலம், ஜூன் 26கணினி அறிவியல், அரசியல் அறிவியல், ஜூன் 27வேதியியல்,கணக்குப்பதிவியல், புவியியல், ஜூன் 28 கணினி அறிவியல், புள்ளிவிவரங் கள், உயிர் வேதியியல், ஜூன் 28இயற்பியல், பொருளியல், கணினி தொழில்நுட்பம், ஜூன் 29உயிரியல், தாவரவியல், வரலாறு, வணிகக் கணிதம் ஜூலை1 கணிதம், விலங் கியல், வணிகவியல் உள்ளிட்ட தேர்வுகள் நடைபெற உள்ளன.

ஜூலை 2மொழிப்பாடம், ஜூலை 3ஆங்கிலம், ஜூலை 4இயற்பியல், பொருளியல், ஜூலை 5கணினி அறிவியல், தொடர்பி யல் ஆங்கிலம், உயிரி வேதியியல், அரசியல் அறிவியல் ஜூலை 6தாவரவியல், வரலாறு, ஜூலை 8கணிதம், வணிகவியல், நுண்ணுயிரியல், ஜூலை 9வேதியியல், கணக்குப் பதிவியல், புவியியல் தேர்வுகள் நடைபெறவுள்ளன.

# தாம்பரம் ரெயில் நிலையத்தில் ரூ.4 கோடி பறிமுதல் செய்யப்பட்ட விவகாரம்: சென்னை ஐகோர்ட்டு கேள்வி

சென்னை, ஜூன்5

நாடாளுமன்ற தேர்தலின் போது, வாக்காளர்களுக்கு வினியோகிப்பதற்காக நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் சுமார் 4 கோடி ரூபாய் பணம் கொண்டு சென்ற விவகாரம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார் விசாரித்து வருகின்றனர். திருநெல்வேலி தொகுதி பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் நயினார் நாகேந்திரனின் ஆட்கள், 3 கோடியே 98 லட்சத்து 91 ஆயிரத்து 500 ரூபாயை கொண்டு சென்றது கண்டு பிடிக்கப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு அமைப்புச் செயலாளர் கேசவ விநாயகத்திற்கு சி.பி.சி.ஐ.டி. போலீசார் சம்மன் அனுப்பினர். சம்மனை ரத்து செய்யக்கோரி கேசவ விநாயகம் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


பறிமுதல் செய்யப்பட்ட பணத்துக்கும், தனக்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும், அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்படும் புலன் விசாரணையே சட்டவிரோதமானது என்பதால் இந்த வழக்கின் விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும். வழக்கை ரத்து செய்ய வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் முன்பு இன்று விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் சார்பில், எந்த தொடர்பும் இல்லாத நிலையில் சட்ட விரோதமாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், சட்டவிரோதமாக பதியப்பட்ட வழக்கை புலன் விசாரணை செய்ய முடியாது என்றும் சம்மன் அனுப்பப்பட்டுள்ளதால் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும் எனக் கோரினார்.

சட்டவிரோத வழக்கு என எப்படி கூறமுடியும் என கேசவ விநாயகம் தரப்புக்கு கேள்வி எழுப்பிய நீதிபதி, விசாரணைக்கு அழைத்தால் ஆஜராகும் படி தெரிவித்தார். இதற்கு பதில் அளித்த கேசவ வினாயகம் தரப்பு வழக்கறிஞர், தேர்தல் தொடர்பான இந்த வழக்கு உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

பணம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. நடைமுறையை பின்பற்றினால் பணம் சென்று விடும் என நீதிபதி குறிப்பிட்டார். தொடர்ந்து சிபிசிஐடி சார்பில் பதில் அளிக்க கால அவகாசம் கேட்கப்பட்டதை தொடர்ந்து, வழக்கு விசாரணையை வரும் 6ம் தேதி தள்ளி வைத்தார்.

# மனைவியின் கழுத்தை அறுத்து கொலை செய்துவிட்டு கணவன் தற்கொலை... தூத்துக்குடியில் அதிர்ச்சி



தூத்துக்குடி, ஜூன் 5

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகே உள்ள கலுங்குவிளையைச் சேர்ந்தவர் இஸ்ரவேல் மகன் பிரபாகரன் பீம்சிங்(46). இவர் அதே பகுதியில் பன்றிகள் வளர்த்து வருகிறார். இவரது மனைவி ஆஷா(34). இவர்களுக்கு திருமணமாகி 13 வருடம் ஆகிறது. இந்த தம்பத்தியினருக்கு ரியான் பிரபாகரன்(13 )என்ற மகன் உள்ளார்.

பிரபாகரனுக்கு மனைவி ஆஷா மேல் தீராத காதல் இருந்து வந்துள்ளது. மனைவி ஆஷாவுக்கு சிறிய தலைவலி, உடல்நலம் பாதிக்கப்பட்டால் கூட தனது காரில் திருநெல்வேலி அல்லது மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று நன்றாக கவனித்து வந்துள்ளார்.

இதற்கிடையில் மனைவி ஆஷா மீது பிரபாகரனுக்கு சந்தேகம் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் மனைவி எங்கு சென்றாலும் இஸ்ரவேல் பின் தொடர்ந்து வந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது ஆத்திரத்தில் வீட்டில் இருந்த அரிவாளால் பிரபாகரன் தனது மனைவி ஆஷாவின் கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளார். அதன் பின்னர் மனைவி மீது இருந்த அதீத அன்பினால் என்ன செய்வது என்று தெரியாமல் தோட்டத்தில் இருந்த பூச்சிமருத்தை தானும் குடித்து விட்டு மனைவி அருகே படுத்துள்ளார்.

இன்று காலை பிரபாகரன் மகன் காலையில் வீட்டிற்கு சென்று கதவைத் தட்டி உள்ளார். வீடு திறக்காமல் இருந்துள்ளதால் அருகில் இருந்தவர்கள் வீட்டில் இருந்த ஜன்னல் கண்ணாடியை உடைத்து திறந்து பார்த்துள்ளனர். அப்போது ஆஷா ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்துள்ளார். அருகே பிரபாகரன் கிடந்துள்ளதை பார்த்து சாத்தான்குளம் காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து சாத்தான்குளம் டிஎஸ்பி கென்னடி தலைமையிலான போலீசார், நாசரேத் இன்ஸ்பெக்டர் பொறுப்பு ஜீன் குமார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இருவரது உடலையும் மீட்டு சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் பிரபாகரன் வீட்டின் முன்பு நின்ற அவரது காரை போலீசார் சோதனையிட்டனர். காரில் இருவரது உடைகள், ஹர்டை, கூல் டிரிங்ஸ் பாட்டில்களும், அதோடு பூச்சிமருந்து டப்பா மற்றும் ஒரு அரிவாளும் இருந்தது. அதையும் போலீசார் பைற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சாத்தான்குளம் அருகே மனைவியை சந்தேகத்தில் கழுத்தை அறுத்து கொலை செய்து கணவன் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# உல்லாசத்திற்கு வீட்டுக்கு அழைத்த இளம்பெண்... நம்பி சென்ற ஆசிரியருக்கு நேர்ந்த கொடூரம்





கடலூர், ஜூன்5

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தை சேர்ந்தவர் குழந்தைசாமி மகன் விக்டர் (வயது 49). இவர் கருத்து வேறுபாடு காரணமாக மனைவியை பிரிந்து கடந்த 8 ஆண்டுகளாக தனியாக வசித்து வந்தார். கடந்த 6 ஆண்டுகளாக கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் உள்ள தனியார் பள்ளியில் அறிவியல் ஆசிரியராக பணியாற்றி வந்தார். இதற்காக அவர் அதே பகுதியில் வாடகை வீட்டில் தங்கியிருந்தார்.

கடந்த மாதம் 18ந்தேதி கடைக்கு செல்வதாக அவருடன் தங்கி இருந்த சக ஆசிரியர் ஒருவரிடம் கூறி விட்டு வீட்டை விட்டு சென்றார். அதன்பின்னர் அவர்திரும்பிவரவில்லை. அவரை பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இது பற்றி அவரது தாய் பாத்திமாமேரி திருப்பாதிரிப்புலியூர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து மாயமான விக்டரை தேடி வந்தனர்.

இதற்கிடையில், காணாமல் போன விக்டர் குறிஞ்சிப்பாடி பகுதியை சேர்ந்த 21 வயது பட்டதாரியான ஜனனி என்ற இளம்பெண்ணிடம் அடிக்கடி செல்போனில் பேசி வந்தது தெரியவந்தது. அவரை பிடித்து விசாரிக்க போலீசார் முடிவு செய்திருந்த நிலையில் ஜனனி, அண்ணன் முறை கொண்ட தனது உறவினரான தட்சிணாமூர்த்தி (22) என்பவருடன் திருப்பாதிரிப்புலியூர் கிராம நிர்வாக அலுவலர் உசேனிடம் சென்று விக்டரை கொலை செய்ததாக கூறி சரண் அடைந்தார். இருவரையும் அவர் போலீசில் ஒப்படைத்தார். அவர்களிடம் போலீசார் நடத்தி விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

அதன் விவரம் வருமாறு:

விக்டருக்கும், அரியலூர்மாவட்டத்தைசோ்ந்த ஜனனிக்கும் பழக்கம் இருந்துள்ளது. ஏழ்மையில் இருந்த இளம்பெண்ணின் குடும்பத்திற்கு விக்டர் பண உதவி செய்து வந்துள்ளார். இந்த நிலையில் ஜனனி தனது குடும்பத்துடன் குறிஞ்சிப்பாடி பகுதியில் குடியேறியுள்ளார். அங்கும் இருவரும் தனிமையில் சந்தித்து உல்லாசம் அனுபவித்து வந்தனர்.


இந்த நேரத்தில் ஜனனிக்கு வேறு ஒரு வாலிபருடன் திருமண நிச்சயதார்த்த ஏற்பாடு நடந்தது. இதையறிந்த விக்டர், நீ திருமணம் செய்யக்கூடாது. இல்லையெனில் உன்னுடன் உல்லாசமாக இருந்ததை வெளியே கூறிவிடுவேன் என இளம்பெண்ணை மிரட்டியுள்ளார்.

இதனால் பயந்துபோன ஜனனி இதுபற்றி தட்சிணாமூர்த்தியிடம் கூறினார். அவர், ஜனனியுடன் சேர்ந்து விக்டரை கொலை செய்ய திட்டம் தீட்டினார். அதன்படி சம்பவத்தன்று ஜனனி விக்டரை தனது வீட்டுக்கு அழைத்துள்ளார். சதிச்செயலை அறியாத விக்டர் அங்கு சென்றார். ஜனனியின் வீட்டில் 2 பேரும் தனிமையில் இருந்தனர். அப்போது, அங்கு தயாராக இருந்த தட்சிணாமூர்த்தி இரும்பு கம்பியால் விக்டரை அடித்துக் கொலை செய்ததாக தெரிகிறது.

பின்னர் அவரது உடலை 2 பேரும் சேர்ந்து சாக்கு மூட்டையில் கட்டி மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்று நெய்வேலி வேலுடையான்பட்டு பகுதியில் முட்புதரில் வீசிவிட்டு எதுவும் தெரியாததுபோல் வந்துவிட்டது தெரிந்தது. இதையடுத்து தட்சிணாமூர்த்தி, விக்டரின்உடலை வீசிய இடத்தை நேற்று போலீசாருக்கு அடையாளம் காட்டினார்.

அங்கு விக்டரின் உடல் சாக்கு மூட்டையில் எலும்புக்கூடாககிடந்தது. அதை கைப்பற்றிய போலீசார், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து, போலீசார், விக்டர் காணாமல் போனதாக பதிவு செய்த வழக்கை, கொலை வழக்காக மாற்றி தட்சிணாமூர்த்தி, ஜனனி ஆகிய 2 பேரையும் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரபை ஏற்படுத்தி உள்ளது.

# மெரினாவில் 132 நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி: மாநகராட்சி நடவடிக்கை



சென்னை: ஜூன்5

சென்னையில் சிறுவர்சிறுமிகளை தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்கள் விரட்டி கடிக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகிறது. சமீபத்தில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மாநகராட்சி பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த 5 வயது சிறுவனை 2 நாய்கள் கடித்து குதறின.

கடந்த 1ந்தேதி புழலில் 12 வயது சிறுவன் மற்றும் கே.கே.நகரில் 16 வயது சிறுவன் ஆகியோரை நாய்கள் கடித்தன. இந்த சம்பவங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வந்தன.

இதையடுத்து தெருக்களில் சுற்றித் திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி போடும் நடவடிக்கையை சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு விலங்குகள் நல வாரியமும் இணைந்து மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் சென்னை மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம் அருகே தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி போடும் பணியை மாநகராட்சி ஊழியர்கள் மேற்கொண்டனர். இதற்காக மெரினா கடற்கரையில் சுற்றித் திரிந்தநாய்களைபிடிக்கும் பணியில் நாய் பிடிப்பவர்கள் 15 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். 2 வண்டிகளில் அந்த நாய்கள் பிடிக்கப்பட்டன.

இதில் 26 செல்லப் பிராணிகள் உள்பட 132 நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டது. மேலும் நாய்களுக்கு குடற்புழு நீக்கத்துக்கான ஊசியும் போடப்பட்டது.

இதற்காக செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்கள் தங்கள் செல்லப் பிராணிகளை அங்கு கொண்டு வந்திருந்தனர்.

வளர்ப்பு நாய்களை பொது இடங்களுக்கு அழைத்து செல்வதற்கும், அதை வளர்ப்பதற்கான அனுமதியை பெறுவதற்கும் ரேபிஸ் தடுப்பூசி கட்டாயம் என்பதால் நாய் வளர்ப்பவர்கள் ரேபிஸ் தடுப்பூசி போட்டு வருகிறார்கள்.

கடந்த மே மாதம் முதல் இதுவரை நாய் வளர்ப்பதற்காக 4,345 உரிமங்களை சென்னை மாநகராட்சி ஆன்லைன் மூலம் வழங்கியுள்ளது. மேலும் 2,196 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. 9,700 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

# தாம்பரம்— செங்கல்பட்டு உயர்மட்ட பாலம் கைவிடப்படுகிறது



சென்னை, ஜூன் 5

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மக்கள் தொகை பெருக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வாகனங்களின் எண்ணிக்கை பலமடங்கு உயர்ந்து உள்ளன. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. வாகன நெரிசலை தடுக்கும் வகையில் புதிய மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கோயம்பே ட்டில் செயல்பட்டு வந்த பஸ்நிலையமும் தற்போது கிளாம்பாக்கத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது. இதனால் தற்போது தாம்பரம், பெருங்களத்தூர், வண்டலூர் பகுதிகளில் கூடுதலாக வாகன நெரிசல் ஏற்பட்டு வருகின்றன.

இதனை தடுக்கும் வகையில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஜி.எஸ்.டி. சாலையில் வண்டலூர் சந்திப்பில் இருந்து காட்டாங்கொளத்தூர் வரை முதல் கட்டமாக உயர்மட்ட மேம்பாலம் அமைக்க திட்டமிட்டுள்ளனர். இதற்கான கட்டுமான பணிகள் இந்த ஆண்டு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஏற்கனவே போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் தாம்பரம் செங்கல்பட்டு இடையே 6 வழிச்சாலையாக சுமார் 27 கி.மீட்டர் தூரத்திற்கு உயர் மட்ட மேம்பாலம் அமைக்க திட்டமிடப்பட்டு இருந்தது. ரூ.3523 கோடி செலவில் இந்த மேம்பாலம் பெருங்களத்தூரில் இருந்து தொடங்கி பரனூர் சுங்கச்சாவடிக்கு முன்பு முடிக்க திட்டமிட்டு இருந்தனர். இதனால் அதிகப்படியான செலவு மற்றும் கூடுதல் சுங்ககட்டணம் வசூலிக்கும் நிலை இருந்தது.

இதற்கிடையே தாம்பரம் செங்கல்பட்டு இடையேயான 27 கி.மீட்டர் உயர்த்தப்பட்ட மேம்பால திட்டத்தை கைவிட தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முடிவு செய்து உள்ளது. இதற்கு பதிலாக ஜி.எஸ்.டி.சாலையில் முக்கியமான சாலை சந்திப்புகளில் கூடுதலாக மேம்பாலங்கள் கட்ட திட்டமிட்டு உள்ளது. ஏற்கனவே முக்கிய சந்திப்புகளான வண்டலூர் மற்றும் பெருங்களத்தூரில் மேம்பாலங்கள் உள்ளன.

இதைத்தொடர்ந்து வண்டலூர் அருகே கிளாம்பாக்கம், அய்யஞ்சேர சந்திப்பு முதல் பொத்தேரி வரை சுமார் 7 கி.மீட்டர் தூரத்திற்கு உயர்த்தப்பட்ட மேம்பாலம் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதன் மூலம் வாகனங்கள் ஊரப்பாக்கம், கூடுவாஞ்சேரி, மற்றும் காட்டாங்கொளத்தூருக்கு செல்லாமல் பயணம் செய்யமுடியும். இதற்கான திட்டமதிப்பீடு மற்றும் மேம்பாலம் அமைய உள்ள இடங்கள் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

இறுதிகட்ட அனுமதி கிடைத்தவுடன் மேம்பாலப்பணிகள் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். இதே போல் மறைமலைநகர், போர்டு தொழிற்சாலை, சிங்கப்பெருமாள்கோவில், மற்றும் மகேந்திராசிட்டி பகுதியிலும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கதிட்டமிடப்பட்டு உள்ளது. இது 6 வழிப்பாதையாக அமைய உள்ளன. இதனால் சென்னை புறநகர் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல்களுக்கு விடிவு பிறக்கும்.

# கோயம்பேடு சந்தை வளாகத்தில் 200 கண்காணிப்பு கேமராக்கள்



சென்னை: ஜூன் 5

கோயம்பேடு சந்தை வளாகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட காய்கறிகள், பழங்கள், பூக்கள் மற்றும் உணவு தானியங்கள் மொத்த மற்றும் சில்லரை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.


மேலும், இங்கிருந்து திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சீபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள சந்தைகளுக்கு லாரிகள் மூலம் காய்கறிகள் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. இதனால், கோயம்பேடு சந்தை வளாகம் 24 மணிநேரமும் பரபரப்புடனேயே காணப்படும்.

இந்த நிலையில், சந்தை வளாகத்தில் பகல் மற்றும் இரவு நேரங்களில் மர்ம நபர்கள் சிலர் வாகன திருட்டில் ஈடுபடுவதுடன், தனியாக சிக்கும் வியா பாரிகள், பொதுமக்களை மிரட்டி அவர்களிடமிருந்து பணம், கைப்பேசி உள்ளிட்டவற்றை பறித்துச்செல்லும் சம்பவங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், பொது மக்கள், வியாபாரிகள் பாதுகாப்பு நலன் கருதியும், குற்றச்செ யல்களில் ஈடுபடும் நபர்களை கண்டறி யவும், சந்தை வளாக பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும் என வியாபாரிகள்தொடர்ந்துகோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்ற கோயம்பேடு அங்காடி நிர்வாகம் சந்தை பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த முடிவு செய்து, அந்த பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

இதன்படி, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 200 கண்காணிப்பு கேமராக்களை முதல் கட்டமாக பொருத்தி வருகிறது. இதற்கான கட்டுப்பாட்டு அறை அங்காடி நிர்வாக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தகட்டுப்பாட்டு அறை மூலம் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு, குற்ற செயல்களை தடுக்க முடியும் என அங்காடி நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வேடசந்தூரில் 100 வயது சுதந்திர போராட்ட தியாகி மரணம்



வேடசந்தூர்: ஜூன் 5

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரை சேர்ந்த சுதந்திர போராட்ட தியாகி கிருஷ்ணசாமி (100). கடந்த 1923ம் ஆண்டு ஆக.15ல் பிறந்த இவர் பல்வேறு சுதந்திர போராட்டங்களில் கலந்து கொண்டவர். இவருக்கு ராஜம்மாள் என்ற மனைவியும், 2 மகன் மற்றும் 1 மகளும் உள்ளனர். கடந்த சில நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த கிருஷ்ணசாமி நேற்று இரவு உயிரிழந்தார். அவருக்கு உறவினர்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இன்று மாலை வேடசந்தூரில் அவரது உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

# என்ன முடிவு வந்தாலும் அதை ஏற்றுக் கொள்கிறேன்... தமிழிசை



சென்னை, ஜூன் 5

தென்சென்னை பாராளுமன்ற தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட தமிழிசைசவுந்தரராஜன் பின்னடைவை சந்தித்துள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர்தமிழச்சி தங்கபாண்டியன் முன்னிலை வகிக்கிறார்.

இந்த நிலையில், தேர்தல் முடிவு குறித்து தமிழிசை சவுந்தரராஜன் கூறுகையில்,

அனைத்து அரசியல்வாதிகளும், அனைத்து தலைவர்களும் தங்களின் நம்பிக்கையை இந்நேரத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்த ஜனநாயக நடைமுறையை உலகம் முழுவதும் பாராட்டப்படுகிறது.

பிரசாரம் செய்ய எனக்கு மிகக்குறுகிய நேரமே இருந்தது. ஆனால் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்ன முடிவு வந்தாலும் அதை ஏற்றுக்கொள்கிறேன். நான் நம்பிக்கையானவள், தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அது மக்களுக்கானது. நான் என்றென்றும் மக்களுக்கு சேவை செய்வேன்... என்றார்.

# திருச்சி தொகுதியில் மக்களுக்கு தேவையானவற்றை செய்து தருவேன் துரை வைகோ



திருச்சி, ஜூன். 5

திருச்சி பாராளுமன்ற தொகுதி வாக்கு எண்ணிக்கையில் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ தொடர்ந்து முன்னிலையில் உள்ளார். வாக்கு எண்ணிக்கையை பார்வையிட்ட அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தற்போது வரை நான் முன்னிலையில் இருப்பது மக்கள் என் மீதும், தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் மீதும் வைத்துள்ள நம்பிக்கையாகவே பார்க்கின்றேன். தேர்தலைப் பொறுத்தவரை வாக்காளர்களே எஜமானர்கள். யாரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை அவர்களே முடிவு செய்கின்றனர்.


என் தந்தையிடம் தற்போதுவரைபேசவில்லை, தேர்தலில் நிற்பதற்கு தனிப்பட்ட விருப்பம் எனக்கு இல்லை. எனினும் தொண்டர்களுக்காகவே தேர்தலில் நின்றேன். நான் முன்னிலையில் இருப்பது அவர்களுக்கும், கூட்டணியில் உள்ள ஒவ்வொரு கட்சியினருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்றதும் திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு தேவையானவற்றை செய்து தருவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

மாவட்ட செயலாளர்கள் வெல்லமண்டி சோமு, டி.டி.சி,சேரன், மணவை தமிழ் மாணிக்கம், மாநில துணை செயலாளர் ரொசையா நிர்வாகிகள் கவுன்சிலர் அப்பீஸ் முத்துக் குமார், எல்லக்குடி அன்புராஜ், துரை வடிவேல், பகுதி செயலாளர்கள் ராமமூர்த்தி, ஆசிரியர் முருகன், ஆடிட்டர் வினோத் மற்றும் பலர் உள்ளனர்.

# வாக்கு எண்ணிக்கை எதிரொலி: சுற்றுலா பயணிகள் இன்றி வெறிச்சோடிய கன்னியாகுமரி



கன்னியாகுமரி, ஜூன் 5

சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். கடந்த ஏப்ரல் மாதம் முதல் பாராளுமன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடங்கியதால் கன்னியாகுமரிக்கு வட மாநில சுற்றுலாபயணிகள் வருகை அடியோடு குறைந் தது.

இதற்கிடையில் கோடை காலத்தில் கடும் வெயில் கொளுத்தியதாலும், அதன்பின்னர் தொடர் மழை பெய்ததினாலும் கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்தது.

இந்த நிலையில் பாராளுமன்ற தேர்தல் முடியும் தருவாயில் பிரதமர் மோடி விவேகானந்தர் மண்டபத்தில் 3 நாட்கள் தியானத்தில் ஈடுபட்டார். பிரதமர் மோடி வருகையையொட்டி போலீசார் கடும் கட்டுப்பாடு விதித்ததால் சுற்றுலாப் பயணிகள் கடற்கரைக்கும், சுற்றுலா தலங்களுக்கும் செல்ல முடியாமல்சிரமம்அடைந்தனர்.

மேலும் விவேகானந்தர் மண்டபத்துக்கு படகு போக்கு வரத்து இடையே நிறுத்தப்பட்டது. இதனால் விவேகானந்தர் மண்டபத்தையும் சுற்றுலா பயணிகள் சரியாக பார்க்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

மேலும் இந்த 3 நாட்களும் லாட்ஜ்களில் சுற்றுலா பயணிகளுக்கு தங்குவதற்கு அறை கொடுக்கப்பட வில்லை. இதனால் ஏற்கனவே லாட்ஜ்களில் அறை புக்கிங் செய்திருந்த ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கன்னியாகுமரிக்கு வராமல் அறைகளை காலி செய்தனர். இதனால் கன்னியாகுமரிக்கு கடந்த 30ந்தேதி முதல் 1ந்தேதி வரை சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்தது.

இதற்கிடையில் பாராளுமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடை பெற்றதால் கன்னியாகுமரிக்கு சுற்றுலாப்பயணிகள்வருகை குறைந்துள்ளது. இதனால் கடற்கரை பகுதி மற்றும் சுற்றுலா தலங்கள் சுற்றுலா பயணிகள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி கிடக்கிறது.

இதனால் இந்த ஆண்டு கோடை விடுமுறை சீசன் வியாபாரிகளுக்கு கை கொடுக்காமல் போனது. இதனால் கன்னியாகுமரி வியாபாரிகள் வியாபாரம் நடக்காத விரக்தியில் உள்ளனர்.

# வாக்கு எந்திரத்தில் எக்கச்சக்க குளறுபடி: சென்னையில் பரபரப்பு

சென்னை, ஜூன் 5

மத்திய சென்னையில் பல பகுதிகளில் வாக்கு எண்ணிக்கையில் குளறுபடி மற்றும் மந்தமாக இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

காலை 8 மணிக்கு தபால் வாக்குகள் எண்ணும் பணி தொடங்கியது. அதனைத் தொடர்ந்து 10 நிமிட இடைவெளியில் 6 தொகுதியில் இருந்து பெட்டிகள் எடுக்கப்பட்டு வாக்கு எண்ணும் பணி தொடங்கியது.

முதல் சுற்றின் போது வில்லிவாக்கம் பகுதியில் உள்ள 12வது தெருவில் வாக்கு எண்ணும் எந்திரம் பழுதானதால் வேறு எந்திரம் மாற்றப்பட்டதிலும் கால தாமதம் ஏற்பட்டது. இதனால் முதல் சுற்று முடிவு அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

அதேபோல ஆயிரம்விளக்கு தொகுதி 2வது சுற்று பணி ஆரம்பிக்கும் போது 4வது மேஜையில் உள்ள மின்னணு வாக்கு எந்திரம் பழுதானது. அதையும் சீர் செய்யும் பணி நடைபெற்றதால் அதேபோன்று கால தாமதம் ஏற்பட்டது.

அதனைத்தொடர்ந்து 3வது சுற்றில் துறைமுகம் தொகுதியில் 8வது மேஜையில் உள்ள மின்னணு வாக்கு எந்த பழுதானது. சீர் செய்வதில் தாமதம் ஏற்பட்டது. தொடர்ந்து இது போன்ற மின்னணு பழுது காரணமாக சரியான ஒருங்கிணைப்பு இல்லாததாலும் வாக்கு எண்ணும் பணி மந்தமாக நடைபெற்றது.

காலை 10 மணிவரை ஒரு சுற்று முடிவு மட்டுமே அறிவிக்க முடிந்தது. ஒவ்வொரு சுற்று முடிவும் அறிவிக்கப்படுவதற்கு முன்பு பெயர்பலகையில் வாக்காளர்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட பின்னரே 2வது சுற்று தொடங்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

# பங்குச்சந்தையில் பா.ஜ.க. பல லட்சம் கோடி ஊழல்செல்வப்பெருந்தகை



சென்னை, ஜூன் 5

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையத்தில் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, பா.ஜ.க. நேற்று ஒரு நாள் மட்டும் பங்குச்சந்தையில் பல லட்சம் கோடி ரூபாய் சம்பாதித்திருப்பதாக குற்றம்சாட்டியுள்ளார். மேலும் அவர்கூறியதாவது:

எதற்காக நேற்றைய தினம் 10 ஆயிரம் புள்ளிகளுக்கு மேல் பங்குச்சந்தை ஏறியது, அதுமட்டுமில்லாமல் இன்று ஏன் 10 ஆயிரம் புள்ளிகள் பங்குச் சந்தை சரிவை சந்தித்துள்ளது. என்ன காரணம்?

வாக்கு எண்ணிக்கை ஒருநாள் விட்டு 1ந்தேதி நடைபெற்றிருக்க வேண்டும். ஏன் 2ந்தேதி பா.ஜ.க. வாக்கு எண்ணிக்கையை வைக்கவில்லை? ஏனென்றால் பா.ஜ.க. நேற்று ஒரு நாளில் மட்டும் பல லட்சம் கோடிகளை பங்குச்சந்தையில்சம்பாதித்துள்ளது.

பங்குச்சந்தையில் லாங், ஷாட் என்று சொல்வார்கள் இதில் ஷாட்டில் சென்று அனைத்து முதலீடுகளை வாங்கிவிட்டனர். அதனை நேற்று மாலையே விற்றுவிட்டனர். இன்று மேலும் வாங்குவார்கள் இதில் பா.ஜ.க.வுக்கு இரட்டிப்பு லாபம் கிடைத்துள்ளது. இதில் பல தலைவர்கள் பல லட்சங்களை சம்பாதித்திருப்பார்கள் என்பது போகப்போக விசாரணையில் தெரியவரும்.

இவ்வாறு செல்வப்பெருந்தகை குற்றம்சாட்டி உள்ளார்.

# குமரி தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் போலீசாருடன் கட்சி முகவர்கள் வாக்குவாதம்



நாகர்கோவில், ஜூன் 5

கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதி மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை நாகர்கோவில் கோணம் என்ஜினீயரிங் கல்லூரியில் இன்று காலை தொடங்கியது. இதையடுத்து அங்கு போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது.

அந்தப் பகுதயில் போக்கு வரத்தும் மாற்றி அமைக்கப் பட்டு இருந்தது. அந்த பகுதி யில் பேரிகார்டுகள்அமைத்து போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். வாக்கு எண்ணும் பணிக்கான ஊழியர்கள் மற்றும் முகவர்கள் அடையாள அட்டைகாண்பித்தபிறகே உள்ளே அனுமதிக்கப் பட்டனர்.

வாக்கு எண்ணிக்கை நடை பெறும் மையத்திற்குள் அனுமதிக்கப்பட்ட முகவர்களை போலீசார் சோதனைக்கு பிறகே உள்ளே அனுமதித்தனர். அவர் களுக்கு வழங்கப் பட்டஅடையாளஅட்டை மற்றும் படிவம் 18 வைத்திருந்தால் மட்டுமே உள்ளே அனுமதிக்க முடியும் என்று பணியில் இருந்த போலீசார் தெரிவித்தனர்.

ஆனால் ஒரு சில முகவர்கள் மட்டுமே படிவம் 18 வைத்திருந்தனர். படிவம் 18 இல்லாத முகவர்களை போலீசார் வாக்கு எண்ணும் மையத்திற்குள் நுழைய அனுமதிக்க வில்லை. இதனால் முகவர்கள், போலீசாருடன் வாக்குவாதத்தில் இதைத்தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட முகவர்கள் வாக்கு எண்ணும் மையத்தின் வெளியே சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பிறகு படிவம் 18 இல்லாமல் அடையாள அட்டை வைத்திருந்த முகவர்களை போலீசார் அனுமதித்தனர். இந்த சம்பவத்தால் நாகர்கோவில் வாக்கு எண்ணும் மையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# அட்லிக்காக சல்மான் கான் செய்த செயல் வைரல் வீடியோ



ரிலையன்ஸ் குழும தலைவரும், ஆசியாவின் பெரும் பணக்காரர்களில் ஒருவருமான முகேஷ் அம்பானியின் இளைய மகன் ஆனந்த் அம்பானிக்கும் ராதிகா மெர்ச்சண்டிற்கும் வரும் ஜூலை மாதம் 12 ஆம் தேதி திருமணம் நடைபெற உள்ளது. அம்பானி வீட்டு திருமண கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக கடந்த மார்ச் மாதம் அனந்த் அம்பானியின் ப்ரீ வெட்டிங் நிகழ்ச்சி குஜராத்தில் பிரம்மாண்டமாக நடந்து முடிந்தது.


ஆனந்த் அம்பானியின் இரண்டாவது ப்ரீ வெட்டிங் ஈவண்ட் கடந்த சில நாட்களுக்கு முன் இத்தாலியில் இருந்து தெற்கே செல்லும் சொகுசு கிருயூஸ் கப்பலில் கோலாகலமாக நடந்தது. இந்த விழாவில் ஏராளமான திரைப்பிரபலங்கள் மற்றும் தொழிலதிபர்கள் கலந்துக் கொண்டனர். ஆனந்த் அம்பானி மற்றும் ராதிகா மெர்ச்சன்ட்டின் இரண்டாவது ப்ரீ வெட்டிங் இத்தாலிய கடலோர கிராமமான போர்டோபினோவில் [Portofino] நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் ஆனந்த் அம்பானியின் விழாவில் கலந்துக்கொண்ட அட்லி மற்றும் சல்மான் கானின் வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் தற்பொழுது வைரலாகி வருகிறது. இயக்குனர் அட்லி, ஆனந்த் அம்பானியின் ப்ரீ வெட்டிங் ஈவண்டிற்கு ஃப்ரான்ஸ் செல்வதற்காக மும்பை ஏர்போர்டில் சில நாட்களுக்கு முன் வந்தார். அப்பொழுது அவரை தொடர்ந்து சல்மான் கானும் அவரது காரில் ஏர்போர்டிற்கு வந்தடைந்தார். அங்கிருந்த செக்கியூரிட்டி கார்டுகள் சல்மான் கான் முதலில் செல்ல வேண்டும் என இயக்குனர் அட்லியை காக்க வைத்தனர்.

ஆனால் சல்மான் கான் , அட்லியை பார்த்து சிரித்துவிட்டு ஏர்போர்ட் செக்யூரிடிடம் அவர் என்னோடு தான் வருகிறார் என்று கூறி அட்லியை முன்னாடி செல்லும்படி கை அசைக்கிறார். அட்லி சிரித்துக் கொண்டே உள்ளே செல்கிறார். இந்த வீடியோ தற்பொழுது சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.

சல்மான் கான் தற்பொழுது இயக்குனர் ஏ.ஆர் முருகதாஸ் இயக்கத்தில் `சிகாந்தர்' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எக்ஸ் தளத்தில் போலி அக்கவுண்ட்... இன்ஸ்டாவில் நடிகை ஷாலினி அஜித்குமார் பதிவு




மகிழ்திருமேனி இயக்கத்தில் "விடா முயற்சி" படத்திலும் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் 'குட் பேட் அக்லி' படத்திலும் அஜித்குமார் நடித்து வருகிறார். அஜித்குமாரின் மனைவியான ஷாலினி அவ்வப்போது தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படங்களை பகிர்ந்து ரசிகர்களுக்கு அப்டேட் தருவார். இந்நிலையில், எக்ஸ் தளத்தில் தனது பெயரில் போலியான கணக்கு ஒன்று உள்ளது. தயவு செய்து யாரும் அதனை பின் தொடர வேண்டாம் என்று ஷாலினி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அந்த போலியான எக்ஸ் பக்கத்தை 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பின் தொடர்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேங்ஸ்டராக களம் இறங்கும் சோனியா அகர்வால்





கன்னட திரையுலகில் கொடூரமாக கொலை செய்யும் கொலை கும்பலை மையமாக வைத்து வெளியான 'தண்டுபால்யா' திரைப்படம் மாபெரும் வெற்றிப்படமாக அமைந்தது. அப்படத்தை மையமாக வைத்து தமிழில் இயக்குநர் வெங்கட் இயக்கியுள்ள திரைப்படம் 'தண்டுபாளையம்'. நடிகை வனிதா விஜயகுமார் மற்றும் நடிகை சோனியா அகர்வால் பெண் தாதாவாக நடித்துள்ளனர்.

இப்படத்தை டைகர் வெங்கட், கே.டிநாயக் இணைந்து இயக்கியுள்ளனர். வெங்கட் மூவிஸ் சார்பில் தயாரித்துள்ளது. சோனியா அகர்வால், வனிதா விஜயகுமாருடன் முமைத்கான், சூப்பர் குட் சுப்பிரமணியம், பிர்லா போஸ், ஆலியா, நிஷா ரபிக் கோஷ், ரவிசங்கர், மகரந்த் தேஷ்பாண்டே, ரவிகாலே, நடித்துள்ளனர். இளங்கோவன் ஒளிப்பதிவு செய்ய, ஜித்தின் ரோஷன் இசை அமைத்துள்ளார். சித்தூர், பெங்களூரு, கேஜிஎப், திருச்சி, கடப்பா, நகரி ஆகிய பகுதிகளில் படப்பிடிப்பு நடந்துள்ளது.

படத்தின் டிரைலர் கடந்த மாதம் வெளியானது, திரைப்படம் வரும் ஜூன் 7 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

# குட்டி SK பிறந்துள்ளார்: சந்தோசத்துடன் அறிவித்த சிவகார்த்திகேயன்



சிவகார்த்திகேயன் அயலான் படத்திற்கு பிறகு தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் அமரன் படத்தில் நடித்துள்ளார். கமல்ஹாசனின் ராஜ்கமல் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. சமீபத்தில் இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்து நடிகர் சிவகார்த்திகேயன் படக்குழுவுக்கு விருந்தளித்தார். அமரன் படத்தை தொடர்ந்து ஏ.ஆர் முருகதாஸ் இயக்கும் #Sk 23 படத்திலும் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு பணிகளும் நடைப்பெற்று வருகிறது. இந்நிலையில் சிவகார்த்திகேயன் அவரது மனைவி ஆர்த்தியுடன் குடும்ப உறவினரின் பிறந்தநாள் விழாவில் கலந்துக்கொண்டார். இந்த வீடியோவில் ஆர்த்தி கர்ப்பமான வயிறுடன் காணப்பட்டார். இதனால் இன்னும் சில மாதத்தில் சிவகார்த்திகேயனுக்கு மூன்றாவது குழந்தை பிறக்க போகிறது என்ற தகவல்கள் தீ போல பரவின. இந்நிலையில், தனக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது என்று சிவகார்த்திகேயன் தனது எக்ஸ் பக்கத்தில் அறிவித்துள்ளார். அதில், "எங்களுக்கு நேற்று இரவு (ஜூன் 2) ஆண் குழந்தை பிறந்திருக்கிறான் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். ஆர்த்தியும் குழந்தையும் நலம். ஆராதனாவிற்கும் குகனிற்கும் நீங்கள் தந்த அன்பையும், ஆசியும் எங்கள் மூன்றாவது குழந்தைக்கும் தர வேண்டுகிறோம்" என்று பதிவிட்டுள்ளார். இதற்கு சிவகார்த்திகேயன் ரசிகர்கள் மிகவும் மகிழ்ச்சியுடனும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். ஏற்கனவே சிவகார்த்திகேயனுக்கு மகள் 'ஆராதனா' மற்றும் மகன் 'குகன்' உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஜினிகாந்த் `கூலி' படத்தின் புதிய அப்டேட்




இந்திய திரையுலகின் முன்னணி நடிகர் ரஜினிகாந்த். இவர் நடிக்கும் 171 ஆவது படத்தை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்க இருக்கிறார். சமீபத்தில் இந்த படத்தின் தலைப்பை அறிவிக்கும் டீசர் வீடியோவை படக்குழு வெளியிட்டது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக வைரல் ஆனது.


அந்த வகையில், ரஜினிகாந்த் நடிக்கும் 171 ஆவது படத்திற்கு "கூலி" என தலைப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த படத்தில் ரஜினிகாந்த் கேங்ஸ்டர் வேடத்தில் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகின. இப்படத்தின் கதை தங்க கடத்தல் சம்பவங்களை தழுவி உருவாக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. அனிருத் இசையமைக்கும் இந்த படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

ரஜினிகாந்த் நடித்து வெளியான ஜெயிலர் படம் மாபெரும் வரவேற்பை பெற்றது. லால் சலாம் படத்தை தொடர்ந்து ரஜினிகாந்த் இயக்குநர் ஞானவேல் இயக்கும் வேட்டையன் படத்தில் நடித்துள்ளார்.

இந்த படத்தில் ரஜினிகாந்த் தொடர்பான காட்சிகளின் படப்பிடிப்பு நிறைவு பெற்றதாக சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஜூன் 10 ஆம் தேதி ரஜினிகாந்த் நடிக்கும் "கூலி" படத்தின் படப்பிடிப்பு பணிகள் துவங்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

தற்பொழுது வேட்டையன் படப்பிடிப்பை முடித்துவிட்டு ரஜினிகாந்த அவரது இமய மலை ஆன்மீக பயணத்தில் இருக்கிறார், அதை முடித்துவிட்டு கூலி திரைப்பட படப்பிடிப்பு பணிகளில் கலந்துக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நார்வே செஸ் போட்டி: 6வது சுற்றில் பிரக்ஞானந்தா, வைஷாலி தோல்வி




12வது நார்வே சர்வதேச செஸ் போட்டி அங்குள்ள ஸ்டாவன்ஞரில் நடந்து வருகிறது. இதில் 6 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். அவர்கள் தங்களுக்குள் தலா 2 முறை மோத வேண்டும். மொத்தம் 10 சுற்றுமுடிவில் முதலிடம்பிடிக்கும் வீரர், வீராங்கனை மகுடம் சூடுவார்.

ஆண்கள் பிரிவில் நேற்று நடந்த 6வது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய கிராண்ட்மாஸ்டரான தமிழகத்தை சேர்ந்த பிரக்ஞானந்தா, பிரான்ஸ் வீரர் அலிரெஜாவை எதிர்கொண்டார். இதில் கருப்பு நிற காய்களுடன் ஆடிய பிரக்ஞானந்தா கிளாசிக்கல் ஆட்டத்தில் டிரா கண்டார். இதைத்தொடர்ந்து நடந்த அர்மாகேட்டன் முறையில் 60வது நகர்த்தலில் தோல்வி அடைந்தார். இதேபோல் 2ம் நிலை வீரரான பேபியானா காருனா (அமெரிக்கா) அர்மாகேட்டன் முறையில் சக நாட்டு வீரர் ஹிகரு நகமுராவை வீழ்த்தினார். மற்றொரு ஆட்டத்தில் வெள்ளை நிற காய்களுடன் ஆடிய 5 முறை உலக சாம்பியனும், நம்பர் ஒன் வீரருமான மாக்னஸ் கார்ல்சென் (நார்வே) 30வது காய் நகர்த்தலில் நடப்பு உலக சாம்பியன் சீனாவின் டிங் லிரெனை தோற்கடித்தார்.

6வது சுற்று முடிவில் கார்ல்சென் 11 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஹிகரு நகமுரா 11 புள்ளிகளுடன் 2வது இடத்திலும், பிரக்ஞானந்தா 9½ புள்ளியுடன் 3வது இடத்திலும் இருக்கின்றனர்.

பெண்கள் பிரிவில் ஒரு ஆட்டத்தில் இந்திய வீராங்கனை ஆர்.வைஷாலி 102வது காய் நகர்த்தலுக்கு பிறகு பெண்கள் உலக சாம்பியனான சீனாவின் வென்ஜூன் ஜூவிடம் பணிந்தார். மற்ற ஆட்டங்களில் இந்திய வீராங்கனை கோனெரு ஹம்பி, சுவீடனின் பியா கிரம்லிங்கிடமும், சீனாவின் டிங்கி லீ, உக்ரைனின் அன்னா முசிசுக்கிடமும் அர்மாகேட்டன் முறையில் தோல்வி அடைந்தனர். இன்னும் 4 சுற்றுகள் எஞ்சியுள்ள நிலையில் வென்ஜூன், அன்னா முசிசுக் தலா 10½ புள்ளிகளுடன் முதலிடத்திலும், வைஷாலி 10 புள்ளியுடன் 3வது இடத்திலும் உள்ளனர்.

# டி20 உலகக் கோப்பை கிரிக்கெட், ஒலிம்பிக் போட்டிகள் தூர்தர்ஷனில் ஒளிபரப்பு



வெஸ்ட் இண்டீஸ், அமெரிக்காவில் நடந்து வரும் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் மற்றும் பாரீசில் ஜூலை 26ந் தேதி முதல் ஆகஸ்ட் 11ந் தேதி வரைநடைபெறும் ஒலிம்பிக் போட்டி, ஆகஸ்ட் 28ந் தேதி முதல் செப்டம்பர் 8ந் தேதி வரை நடைபெறும் பாரா ஒலிம்பிக் ஆகியவை தூர்தர்ஷன் விளையாட்டு சேனலில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்று பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி கவுரவ் திவேதி டெல்லியில் நேற்று அறிவித்தார்.

உலகக் கோப்பை போட்டி முடிந்த பிறகு இந்திய கிரிக்கெட் அணி ஜிம்பாப்வே சென்று (ஜூலை 614) 5 இருபது ஓவர் போட்டியிலும், இலங்கைக்கு பயணித்து 3 ஒரு நாள் மற்றும் மூன்று 20 ஓவர் போட்டிகளிலும் (ஜூலை 27 முதல் ஆகஸ்டு 7ந் தேதி வரை) விளையாடுகிறது. இந்த போட்டிகளும் தூர்தர்ஷனில் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. மேலும் பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் டென்னிஸ் ஆகியவற்றின் இறுதி ஆட்டங்களும் ஒளிபரப்பு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: இரட்டையர் பிரிவில் போபண்ணா ஜோடி கால்இறுதிக்கு தகுதி



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பாரீசில் களிமண் தரை மைதானங்களில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 4வது சுற்றில் 11ம் நிலை வீரர் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார் 46, 62, 61, 63 என்ற செட் கணக்கில் தரவரிசையில் 5வது இடம் வகிக்கும் டேனில் மெட்விடேவுக்கு (ரஷியா) அதிர்ச்சி அளித்து கால்இறுதிக்கு முன்னேறினார். 2004ம் ஆண்டுக்கு பிறகு பிரெஞ்சு ஓபனில் கால்இறுதியை எட்டிய முதல் ஆஸ்திரேலிய வீரர் இவர் தான்.

இதன் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டென் ஜோடி 2வது சுற்றில் எதிராளி விலகியதால் விளையாடாமலேயே 3வது சுற்றுக்கு வந்தனர். 3வது சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி ரேயாஸ் வரெலா மார்ட்டினஸ் (மெக்சிகோ) இணையை சந்தித்தனர். இதில் போபண்ணா கூட்டணி 67 (27), 63, 76 (108) என்ற செட் கணக்கில் 2 மணி 20 நிமிடங்கள் போராடி வெற்றி பெற்று கால்இறுதி சுற்றை அடைந்தது.

பெண்கள் ஒற்றையர் 4வது சுற்றில் 2ம் நிலை வீராங்கனை அரினா சபலென்கா (பெலாரஸ்) 62, 63 என்ற நேர் செட்டில் எம்மா நவரோவாவை (அமெரிக்கா) பந்தாடினார். 4ம் நிலை வீராங்கனை எலினா ரைபகினா (கஜகஸ்தான்) 64, 63 என்ற நேர் செட்டில் ஸ்விடோலினாவை (உக்ரைன்) தோற்கடித்தார்.

மற்றொரு ஆட்டத்தில் இத்தாலியின் ஜாஸ்மின் பாவ்லினி 46, 60, 61 என்ற செட் கணக்கில் அவனிஸ்யானை (ரஷியா) விரட்டியடித்து கால்இறுதிக்குள் நுழைந்தார். தரவரிசையில் 15வது இடத்தில் உள்ள பாவ்லினி, கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் கால்இறுதிக்குள் கால்பதிப்பது இதுவே முதல்முறையாகும். அடுத்து அவர் ரைபகினாவை சந்திக்கிறார்.

17 வயதான ரஷியாவின் மிரா ஆன்ட்ரீவா தன்னை எதிர்த்த பிரான்சின் வர்வரா கிராசெவாவை 75, 62 என்ற செட் கணக்கில் சாய்த்து, முதல்முறையாக கால்இறுதிக்கு முன்னேறினார். ஆன்ட்ரீவா கால்இறுதியில் சபலென்காவுடன் பலப்பரீட்சை நடத்துகிறார்.



**அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்**

**விளக்கம்:**

**பொறாமை என்று கூறப்படும் ஒப்பற்ற பாவி, ஒருவனுடைய செல்வத்தைக் கெடுத்துத் தீய வழியில் அவனைச் செலுத்தி விடும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.